**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.127/18**
**வழக்கு சாட்சி – அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சென்றாயன். | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அழகர்சாமி | தொழில் | டிராக்டர் வைத்து தொழில் செய்கிறேன். |
| கிராமம் | கோடாங்கிபட்டி | சமயம் | |
| தாலுக்கா | போடி | வயது | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.02.24

**( 1ம் எதிரி இறந்துவிட்டார். 2ம் எதிரி ஆஜர். 3 முதல் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 3 முதல் 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி செல்வத்திடம் நான் 2013 –2014 ஆண்டு காலத்தில் 3 லட்சம் கடன் வாங்கியிருந்தேன். அதற்குரிய வட்டியை செலுத்தி வந்தேன். அதற்கு பிறகு 2 மாத வட்டியை என்னால் கொடுக்கமுடியவில்லை. தேதி எனக்குஞாபகம் இல்லை 2016ம் வருடம் ஒரு நாள் செல்வம் அவரின் அப்பா, அம்மா, மாமா முருகன், மாமியார் லட்சுமி, அத்தை மகள் ஒருவர் ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்து கத்தியை காட்டி மிரட்டி எங்களை வீட்டை விட்டு வெளியேற்றி வீட்டை எழுதிக்கொடுங்கள் என்று எங்களை நெருக்கடி கொடுத்தார்கள். அதனால் நான் பிசிபட்டி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறியுள்ள விபரத்தை தான் போலிச்விசாரணையிலும் புகாரிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் மீது ஒ்எஸ். 347/17 என 2ம் எதிரி செல்வம் தேனி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு 5.9.20ம் தேதியன்று நான் பணம்

செலுத்தவேண்டும் என்று தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பு நகல் தான் என்னிடம் கா ட்டப்படுவது என்றால் சரிதான். அது எதசாஆ.1. 7.3.15 ம் தேதி நான் 2 ம் எதிரியிடம் 3 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு ஒரு புரோநோட்டு எழுதிக்கொடுத்தேன். என்றால் சரிதான். அதே தேதியல் புரோநோட்டை ஊர்ஜிதம் செய்யும் வகையில் உறுதிமொழி ஆவணம் 2 ம் எதிரி பெயருக்கு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களின் படி மாதம் ஒன்றுக்கு ரூ100 க்கு 1 சதவீத வட்டி கேட்டு தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேனி சார்பு நீதிமன்ற தீர்பபின் படி பணத்தை செலுத்ததால் என் மீது 2 ம் எதிரி இபிஎண்.102/22 என்ற நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து என்னை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றால் சரிதான். நான் 2 ம் எதிரிக்கு எழுதிக்கொடுத்த புரோநோட்டு மற்றும் உறுதிமொழி ஆவணத்தின்படி பணம் கொடுக்ககூடாது என்ற எண்ணத்தில் பணம் செலவழித்தாவது காவல்நிலையத்தில் பொய் புகார் கொடுப்பேன் என்ற எண்ணத்தில் நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் கூறியதுபோலும் முதல்விசாரணையில் கூறியது போலும் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. கடனிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.